ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதிவிசேஷமானது
අංක 2004/53 - 2017 පෙබරවාරි 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.02.02
2004/53 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்கக் கட்டளை*

*எனது குறிப்பு இல. : 4-3/4/2013/டீ/147.*
*பிர. செ. குறிப்பு இல. : வீஈ/டீஎஸ்/எல்எல்டீ/எல்ஏ/பிஏரீஎச்/02.*

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் ஜோன் என்தனீ எம்மானுவெல் அமரதுங்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையைப் பொறுப் பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

ஜோன் ஏ. ஈ. அமரதுங்க,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2017.01.30.*

அட்டவணை

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்:** பிரதேச செயலாளர், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

*2.* **காணியின் விபரம் :** வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில், இல. ஜே/ 281 - பத்தமேனி கிராம உத்தியோகத்தர் பிரிவில், பத்தமேனி கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாண நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2014.05.10 ஆந் திகதிய வைஏ/கேபிவை/2014/42 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் துண்டு 'ஏ' எனக் குறிப்பிடப்பட்ட சுமார் 0.2946 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய காணித்துண்டின் எல்லைகள் :

01. **துண்டு 'ஏ' - கூத்தன் தோட்டம் - விஸ்தீரணம்: சுமார் 0.2946 ஹெக்டயார்**

வடக்கு : யோகாம்பிகை யோகராசா மற்றும் லக்ரீசியா அருளாநந்தம் உரிமை கோரும் கூத்தன் தோட்டம் ; கிழக்கு: லக்ரீசியா அருளாநந்தம் மற்றும் வைத்தியலிங்கம் இரத்னேஸ்வரீ உரிமை கோரும் கூத்தன் தோட்டம் ; தெற்கு: வீதி (வீ. அ. அ. ) ; மேற்கு : கந்தசாமி கனேஷமூர்த்தி உரிமை கோரும் கூத்தன் தோட்டம்.

*02 - 692*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.